# இயந்திரவியல் பொருள்முதல்வாத நோக்கில் சிலப்பதிகாரம்

**ரா. டில்லிபாபு**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**முனைவர் நா. சிவகுரு**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,சேர்க்காடு, வேலூர்

**ஆய்வுச் சுருக்கம்**
*சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. அன்றைய மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களும் அந்த வாழ்க்கையை நிரந்தரமாகத் தக்கவைத்துக்கொள்ளப் பயன்படுத்திய பொருள்களின் செயல்களும் அந்தப் பொருள்களை உருவாக்கிய அன்றைய மக்களின் தனித்த திறமைகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இக்கட்டுரையில் ஊழ்வினை தத்துவமானது அன்றைய மக்களின் நம்பிக்கையாக இருந்துள்ளன. தத்துவக் கோட்பாடான இயந்திரவியல் பொருள்முதல்வாதமானது தொழில் செய்யக் கூடிய அனைவருக்கும் இக்கோட்பாடு பொருந்திவரும். சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தில் தொழில், பொருள் மற்றும் மனிதனின் செயல்களை இயந்திரவியல் பொருள்முதல்வாதம் என்ற கோட்பாட்டு அடிப்படையில் கொண்டு ஆராயப்படுகிறது.*

**முக்கிய வார்த்தைகள் :** *சிலப்பதிகாரம், இயந்திரவியல் பொருள்முதல்வாதம், தொழில், ஊழ், வாழ்க்கை*

.

**முன்னுரை**

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், ஆகிய முத்தமிழ்க் காப்பியம், மூவேந்தர் காப்பியம், குடிமக்கள் காப்பியம், புரட்சிக் காப்பியம், பைந்தமிழ்க் காப்பியம், இரட்டைக் காப்பியம், போன்ற பல பெயர்கள் கொண்டாள்வது சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரம் என்ற காப்பியம் தோன்றுவதற்கும், சிலப்பதிகாரம் என்ற பெயர் பெருவதற்கும் "சிலம்பு" என்ற இயந்திரப் போன்ற தன்மைக் கொண்டப் பொருளே முதன்மையாக அமைந்துள்ளது. இயந்திரம் என்பது **வட்டச் சுழற்சி முறை** ஆகும். பொருள்முதல்வாதம் அதற்கான விளக்கத்தைத் தருகிறது. இக்கட்டுரையில் பொருள்களையும், இயற்கையையும், மனிதனுடைய திறனையும் இயந்திரப் பண்பு கொண்டு பொருள்முதல்வாத நோக்கில் ஆய்வுச் செய்யப்படுகிறது.

**இயந்திரவியல் பொருள் முதல்வாதம்**

இன்றைய உலகம் இயந்திர மையமானது, தொடங்கிய காலமான கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டில் பொருள்முதல்வாதத்திலிருந்து வளர்ச்சி அடைந்துள்ளன. அதனை இயந்திரவியல் பொருள்முதல்வாதம் என்று அழைக்கின்றனர். மனிதனின் அறிவும், இயற்கையின் பொருளும் சேர்ந்து மனிதனின் திறமையினால் ஒரு பொருள் உருவாக்கப்படுகிறது. அந்தப் பொருளின் இயந்திரத் தன்மையை மட்டும் பார்ப்பது. இயந்திரவியல் பொருள்முதல்வாதம் ஆகும். இதன் அடிப்படையில் இயற்கையின் பொருளும் இயந்திரமாகப் பார்க்கப்படுகின்றது. இதனை இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜார்ஜ் பொலிட்சர் என்பவர்

“***இக்காலப் பொருள் முதல் வாதிகள் பொருள்களின் இயந்திர வகைப்பட்ட அம்சங்களாகத்தான் பார்த்தார்களே தவிர அவற்றின் ஜீவிய அம்சங்களைப் பார்க்கவில்லை. அதனால் தான் இது யாந்திரீகப் பொருள் முதல் வாதம்***” என்று கூறிப்பிடுகிறார். (ந. பிச்சமுத்து, 2006), இதன் அடிப்படையில் இயந்திரத்தின் அம்சங்களும், தன்மைகளும் பார்க்கப்படுக்கிறது. சிலப்பதிகாரத்தில் பண்டைய தமிழ்ச்சமூகத்தில் இயற்கை, சமூகம், மரபு, பண்பாடு, அறிவியல், வணிகம், தொழில்கள், இசைக் கருவிகள் மற்றும் போர் கருவிகள் எனப் பல செய்திகள் அடங்கியுள்ளன. இவை அனைத்தும் அவற்றிற்கான தனித்த அம்சங்களைக் கொண்டுள்ளன. இயந்திரவியல் பொருள்முதல்வாதத்தைக் கொண்டு **பிரபஞ்சம் மற்றும் மனிதவாழ்க்கை ஓர் வட்டச் சுழற்சி அமைப்பைக் கொண்டுள்ளது** என்பதை இவ்வாய்வின் மூலம் அறியமுயல்கிறது.

**இயற்கை**

அறிவியல் சக்திக்கு மிஞ்சிய சக்தி என்றால் அது இயற்கையின் சக்திதான். அந்த இயற்கை இயந்திரமாகக் கொள்ளப்பட்டு இலக்கியத்தில் அதனுடைய அம்சங்களும், இயல்புகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மனிதன் இயற்கையில் இருந்து பல செய்திகளைத் தெரிந்துக்கொள்கிறான். தனியாக இல்லாமல் விலங்குகளைப் போல கூட்டமாக வாழத் தெரிந்துக்கொள்கிறான். அவன் இரவும், பகலும் மாறிமாறி வருவதையும், அத்துடன் அதற்குக் காரணமாக நிலாவும், சூரியனும் இருப்பதையும் உணர்கிறான். இரண்டும் எங்கு தொடங்குகிறதோ அதே இடத்தில் மீண்டும் தொடங்குகிறது. அதே போல் எங்கு மறைகிறதோ அங்கே மீண்டும் மறைகிறது. இரண்டும் வெவ்வேறு பாதையில் அவற்றின் செயல்பாடுகளால் கடிகார முள் போல வட்டமாகச் சுற்றித் தொடங்கிய இடத்திற்கே வந்து செல்கின்றன. இரண்டும் தனித்துவமான அம்சங்களும் செயல்களும் கொண்டுள்ளதன.

நிலா என்பது குளர்ந்த ஒளியினை உலகிற்குத் தருவது மட்டும் இன்றி உலகில் வாழும் சில தாவரங்களின் பூக்கள் மலர்வதற்கும், விலங்குகளுக்கு வேட்டையாடுவதற்கும் பயன்படுகிறது. இங்கு நிலா இயந்திரத் தன்மைக் கொண்டதாகப் பார்க்கபடுகிறது.

அதைப் போல் சூரியன் உலகிற்கு வெப்பமான ஒளியைத் தருவதோடு அதனுடைய ஒளி அம்சங்கள் தாவரங்கள், விலங்குகள், விவசாயம், நெசவுத் தொழில்கள், கருவிகள் என பலவற்றுக்கும் பல வகையில் பயன்படுகிறது. இன்றைக்கு **(solar panel)** சோலார் பேனல் என்ற மின் உற்பத்திமுறையால் மனிதன் சூரியனின் ஒளியை ஒரு இயந்திரமாக மாற்றி அதில் இருந்து பல இயந்திரங்களை ஒளிர்விக்கிறான்.

பகலிலும் இரவிலும் உலா வரும் இயந்திர தன்மை உடைய மேகங்கள் மழையை உலகிற்கு தருகின்றன. இது பல உயிர்களுக்கு வாழ்வாதாரமாகவும், உயிர் வாழ முக்கிய கூறாகவும் மழையின் அம்சங்களும் செயல்பாடுகளும் இருக்கின்றன. இந்த மழை அதிக ஆக்கமும், அழிவும் ஒரு சேரக் கொண்டுள்ள இயந்திரமாகும். நிலா, சூரியன், மழை ஆகிய மூன்றும் மனிதன் வாழ்வதற்கு மட்டுமல்ல உலக உயிர்கள் வாழ்வதற்கும் முக்கியமான பொருளாக உள்ளன. இதனை இளங்கோவடிகள் சிலப்பதிகார தொடக்கத்திலே குறிப்பிடுகிறார். அவை

**“திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!**
**கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றுஇவ்**
**அம்கண் உலகு அளித்த லான்.**
**ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!**

**காவிரி நாடன் திகிரிபோல, பொன்கோட்டு**
**மேரு வலந்திரித லான்.**
**மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!**
**நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்,**
**மேல்நின்று தான்சுரத்த லான்."**

(சிலம்பு, புகார், மங்கலவாழ்த்து, 1-9)

இப்பாடலில் நிலா குளிர்ந்த ஒளியையும், காற்றையும், சோழனின் வெண்கொற்ற கொடையைப் போலவும், இரவில் உலகிற்கு அழகு ஒளி கூட்டி மலர்களை மணம் வீசச்செய்வதைவும் எடுத்துக்கூறுகிறது. சூரியன் என்பவன் மேருமலையினைச் சுற்றி வருகிறது. காவிரி பாயும் நிலங்களுக்கு ஒளிவிசி பயிர்களைச் செழிக்க செய்கிறது. மாமழை உருவாக்கிய கடல் நீர் உலகிற்கு வேலியாக அமைந்துள்ளது.

சிறு சிறு துளியாக மழையினால் உலகிற்கு வேலியாக உருவான கடல். பேர் அழிவுக்கு காரணமாக இருப்பதை இளங்கோவடிகள் காடுகாண் காதையில் கூறுகிறார். இதனை,

**"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"**

(சிலம்பு, மதுரை,காடுகாண்.,19-20)

இந்த பாடலில் பழந்தழிழர்கள் வாழ்ந்த நிலமான குமரிக்கோடு என்ற நிலப்பரப்பு, பஃறுளி நீண்டபரப்பு கொண்ட ஆற்றையும், பல மலைகள் தொடர்ச்சியாக இருந்ததையும் கடல் அழித்தது என்கிறது. கடல் என்ற இயந்திரம் உலகிற்கு வேலியாகவும், ஆபத்தாகவும் அமைந்துள்ளதை இப்பாடல் உணர்த்துகிறது.

**உடை**

உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் முக்கியமான மனிதன் வாழ்வதற்கு பொருளாக அமைந்துள்ளது. தமிழர்க்கு உயிரினும் மேலானது மானம். அந்த மானத்தைக் காப்பது உடையாகும். அந்த உடைகளை மரபு சார்ந்தும் காலமாற்றத்திற்கேற்றார் போலவும் பயன்படுத்திவருகின்றோம். உடையைத் தயாரிக்கும் தொழில் செய்பவர் உடையினைச் சமூகத்தில் ஏற்ற தாழ்வுக்கு ஏற்ற உடைகளைத் தயாரித்தும், வண்ணங்கள் கொடுத்தும் அதன் மதிப்பை கூட்டி வணிகம் செய்திருப்பதை,

**"பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்"**

(சிலம்பு, புகார், இந்திரவிழா.16-17)

இந்த அடிகளால் பட்டு நூலால் செய்யப்பட்ட மயிர் போன்ற மெல்லிய இழையினை உடைய ஆடைகளும், பருத்தி நூலின் இயந்திரங்களைக் கொண்டு நுண்ணிய பல ஆடைகளும் செய்து இருப்பதை உணரமுடிகிறது. இதனைப்போல

**"மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவிற்**
**கைக்கோற் கொல்லனைக் கண்டன னாகித்"**

(சிலம்பு, மதுரை, கொலைக்களக்.107-8)

மெய்ப்பை என்பது உடல் மேல் அணிந்த ஆடை. இதில் அந்த சட்டையைப் போட்டுக்கொண்டு கடை வீதியில் பொற்கொல்லன் நடந்து செல்வதைக் கண்டச் செய்தி கூறப்படுகிறது. கடைகளில் பெண்கள் அணியும் புடவைகள் விற்கப்படுவதை,

**"நூலினு மயிரினு நுழைநூற் பட்டினும்**
**பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து**
**நறுமடி செறிந்த வறுவை வீதியும்"**

(சிலம்பு, மதுரை, ஊர்காண்காதை, 205-207)

என்ற அடிகள் பருத்தி நூலிலும் பட்டு நூலிலும் அதற்குத் தகுந்தாற்போல நெய்யப்பட்ட நல்ல ஆடைகளை எண்ணிக்கை அடிப்படையில் அடுக்கி பலநூறாக மடித்த புடவையைச் சேர்த்து கடைகளுக்குக் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கின்றன.

இதுமட்டும் இல்லாமல் பொன் கடைகளிளும், பிறகடைகளிளும் தனித்துவமான விளம்பரப் பலகைகள் போலக் கொடிகள் பயன்படுத்தப்பட்டு அதற்குப் பல நிறங்களும் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. இச்செய்தியை ஊர்காண் காதையில்,

**“பொலந்தெரி மாக்கள் கலங்கஞ் ரொழித்தாங்**
**கிலங்குகொடி யெடுக்கு நலங்கிளர் வீதியும்”**
(சிலம்பு,மதுரை, ஊர்காண்காதை,203-4)

என்னும் அடியில், பொலந்தெரி மக்கள் தங்கள் கடைகளில் கொடியினைக்கட்டி வைத்தனர். இந்தக் கடையில் இந்தப் பொருள் விற்கப்படுகிறது என்ற செய்தி உணர்த்தப்படுகிறது. இதுபோன்று ஒவ்வொரு இனத்தவர்க்கு ஏற்ற உடைகளும் தயாரித்து பயன்படுத்திய செய்திகளும் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. இதனால் நம் பண்பாட்டுடன் ஆடை ஓர் அங்கமாகச் செயல்படுவதைக் காணமுடிகிறது. உடையின் மூலம் அறிவது நெசவு தொழில் வளர்ச்சி மட்டும் இன்றி அதனை உருவாக்கும் மனிதனின் தொடர் வேலை, அனுபவம் மற்றும் தனித்துவம் வெளிப்படுகின்றது. அவற்களின் செயல்கள் இயந்திரம் என்ற வட்டச் சுழற்சி உடை என்ற பொருள் மேல் இயக்க பெறுகிறது.

**பொற்றொழில்**

பொன் என்ற பொருளுக்கு ஆசைப்படாத மன்னர்களும் மனிதர்களும் இல்லை. அன்று முதல் இன்று வரை தனித்துவமான மதிப்பு உள்ளது. அந்த தங்கம் இயந்திரத் தன்மை முறையில் பல உருவங்கள், கைவினைகள் மூலம் தனித்தன்மை வெளிக்கொண்டு வரச்செய்து கண்கவரும் வண்ணம் மதிப்பைக் கூட்டிய பொற்கொல்லனின் திறனைக் கூறுவதாக அமைந்துள்ளது.

**“கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய**
**நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர“**
(சிலம்பு,மதுரை,கொலைகளக். 105-106)

இப்பாடல் அடிகள் கண்கவரும் நுண்ணிய வேலைப்பாடுகளையும், கைவினைத் திறனையும், நுட்பமான கருவியின் திறனையும் உடையப் பொற்கொல்லனைப் பற்றிக் கூறுகிறது. ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதன் விளைவாக பொற்கொல்லனின் திறமை அறிவதற்கு வட்டச் சுழற்சி தன்மைக் கொண்ட இயந்திரம் பொன் என்ற பொருள் மேல் அவர்களின் செயல்கள் வெளிப்படுவதால் இயந்திரவியல் பொருள்முதல்வாதம் ஆகும்.

**உலோகத்தொழில்கள்**

செம்பு, இரும்பு போன்ற ஓர் உலோகம். இயந்திரம் செய்ய உதவும் பொருளாக அக்காலத்தில் இருந்துள்ளது. இதன் மூலம் வாள், போர் கருவிகள், தேர் அச்சாணி எனப் பல பொருட்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பொருட்கள் செய்பவரைப் பற்றி,

**“கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரும்**
**மரங்கொ ஃறச்சருங் கருங்கைக் கொல்லரும்“**
(சிலம்பு, புகார், இந்திரவிழா. 28-29)

இந்தப் பாடல் அடிகளில் செம்பு என்னும் உலோகத்தில் செய்கின்றப் பொருள்களையும், மரத்தால் தேர் போன்ற பொருள்களைச் செய்யும் தச்சனைப் பற்றியும், இரும்பை உருக்கும் வேலையைச் செய்பவரானக் கருங்கைக் கொல்லரைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சங்க இலக்கியப் புறநானூற்றுப் பாடலில்,

**“கருங்கைக் கொல்லனை யிரக்கும்**
**திருந்திலை நெடுவேல் வடித்தின் எனவே”**
(புறநா. 180-12-13)

என்னும் அடியில் இரும்பு உருக்கும் கொல்லன் பெரிய வேல்வடித்து கொடுத்த செய்தி குறிப்பிடப்படுகிறது. தொழில் மூலமாக கொல்லனின் தனிதன்மை வெளிப்படுத்துவனவாக உள்ளது. இத்தனிதன்மை தொடர் வேலையின் காரனமாக ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதன் வழி ஒரு வட்ட சுழற்சி தோற்றம் பெறுகிறது. இதனையே இயந்திரவியல் பொருள்முதல்வாதம் கூறுகிறது.

**கலங்கரை விளக்கம்**

ஓடம் முதல் சாகரம் என்ற பெரிய கப்பல்கள் வரை அனைத்தும் கடலில் இருந்து கரைக்கு வருவதற்குக் கலங்கரை விளக்கத்தைத் துறைமுகத்தில் அமைத்துள்ளனர். இவ்விளக்கு பரந்த கடலில் மீன் பிடிக்கும் படகுகளுக்குப் பிற வணிகக் கப்பல்களுக்கும் கரையின் திசையைக் காட்டியது.

**"இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்"**

(சிலம்பு, புகார், கடலாடுகாதை, 141)

என்னும் பாடலடி கலங்ரை விளக்கம் பற்றிய செய்தியைப் பகர்கிறது. இது போல பல இடங்களில் விளக்குகள் பயன்படுத்தியுள்ளனர். அவை பண்டகசாலைகளிலும், மீனவர்கள், குயவர்கள், போன்றோரின் விற்பனைக் கூடங்களிலும் பயன்படுத்திய செய்தி கடலாடு காதையில் இடம்பெற்றுள்ளது. இங்கு ஓரே இடத்தில் கலங்கரை விளக்கு என்ற பொருள் இயக்கம் பெறுவதைப் பொருள்முதல்வாதம் விளக்குகின்றன.

**உழவு**

ஆரம்பக்கால மனிதன் நாடோடியாக இருந்து, வேட்டையாடி உணவைச் சேகரித்து, பின் விவசாயம் செய்ய தெரிந்துக் கொண்டான். **உழவு தொழில் மூலம் ஒரே இடத்தில் பயிர்களை விளைவித்து**. பல வருடம் உணவைச் சேகரித்து வைத்து, பலருக்கும் உணவை பங்கிட்டு வழங்குவதற்கும் பயன்படுத்தினான். உழவு என்னும் இயந்திர தன்மைக் காரணமாக அமைந்துள்ளது. இதனை,

**"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்**
**உழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்"**

(சிலம்பு,புகார்,நாடுகாண்காதை,149-50)

இவ்வடியில் பயிர்களுக்கு நீர் இறைப்போர், ஊர் கோட்டம் முன் உழவு மூலம் விளைத்த அனைத்து பொருள்களையும் வைத்திருந்த பழமையான ஊர் என்று கூறுகிறது. உழவன் என்பவன் உணவு என்ற உற்பத்தி பொருளை உருவாக்கும் உற்பத்தி சக்தி ஆகும். உழவனின் ஒரே செயலால் பல வருடங்களுக்கு உணவு மக்களுக்கு கிடைக்க வழிசெய்கின்றன. அந்த உழவனின் செயலே இயந்திரம் என்ற வட்டச் சுழற்சி கொண்டு உணவு என்ற பொருளும் சேர்ந்தது இயந்திரவியல் பொருள்முதல்வாதமாகும்.

**வீடு**

மனித வாழ்விற்கு முக்கிய தேவையாக இருப்பவை உணவு, உடை, உறைவிடம் ஆகும். ஆகியவை உழவு மூலம் உணவு உற்பத்தி செய்யப்படுகின்றது. நெசவு, பருத்தி நூலினால் உடை தயாரிக்கப்பட்டது. மண், கல் போன்றவற்றைச் சுட்டு, உறைவிடம் அமைக்கப்பட்டது. வீடு கட்ட பயன்படுத்தப்பட்ட பொருள்களின் தன்மைகளைப் பற்றிய செய்தியில்,

**"சுடும ணேறா வடுநீங்கு சிறப்பின்**
**முடியர சொடுங்குங் கடிமனை வாழ்க்கை"**

(சிலம்பு, மதுரை,ஊர்காண்காதை,146-47)

இந்த பாடலில் மண்ணைச் சுட்டு செய்த ஓடுகள், செங்கற்கள் போன்றவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட வீடுகள் பற்றிய செய்தியைக் கூறுகிறது. மரபு சார்ந்த வீடுகள் கட்டப்பட்ட செய்திகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. மனிதன் முதலில் நாடோடிகளாக வாழ்ந்து இருந்தான். சில காலங்களில் நிலையான வாழ்கையை வாழ்வதற்கு தங்கும் இடம் அமைத்துக் கொணடான். அதன் விளைவாக அவன் எங்குச் சென்றாலும் மீண்டும் அவன் இருப்பிடத்திற்கே வந்து சேர்க்கிறான். இது வட்டச் சுழற்சி ஆகும். உறைவிடம் என்ற பொருள் மனிதனை இயக்குகிறது.

**இசை**

பழந்தமிழர்கள் தங்களின் திறமையால் பல இசைக் கருவிகள் அக்காலத்தில் இயந்திர முறையினால் உருவாக்கபட்ட உருமி, மத்தளம், புல்லாங்குழல், வீனண, யாழ் போன்ற இசைக்கருவிகள் அதனுடைய தனித்துவத்தையும் தெரிந்து பயன்படுத்தி வந்துள்ள செய்தி சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. அவை,

> **"குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்**
> **தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்"**
> (சிலம்பு,புகார்,அரங்கேற்றுகாதை,139-40)

இந்த அடியில் புல்லாங்குழல் உடன் யாழ் இசைக்கப்படுகிறது, அத்துடன் தண்ணுமை என்னும் இசைக்கருவியும் இசைக்கப்படுகிறச் செய்தி கூறுகிறது. யாழ் இசைக்கருவிக்கு செந்நிற வண்ணங்கள் பூசப்பட்ட செய்தி மதுரைக்காண்டத்தில் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு தனித்த இசைக்கருவிகள் இயக்க கூடிய திறன் பெற்ற கலைஞர்களே அதனைப் பயன்படுத்தி வந்துள்ளதை அறியமுடிகிறது. இதில் இயந்திரம் என்பது இசைக்கருவி ஆகும். இது ஒரு பொருள் என்பதால் இயந்திரவியல் பொருள்முதல்வாதம் பயின்றுவருகின்றன.

**ஊழ்**

ஊழ் என்ற பொருளைப் பண்டைய தமிழர்கள் மிகுந்த நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். **ஊழ்வினை என்பது வட்டம்** போன்றது. தீய செயல் செய்தால் அந்த செயலுக்கான பலன் மீண்டும் நம்மையே வந்து சேரும் என்ற நம்பிக்கைக் கொண்டு இருந்தனர். அனைத்து மதமும், சமயங்களும் இதனையே வலியுறுத்துகிறது. இந்த சிலப்பதிகாரம் ஊழின் இயந்திரத் தன்மைக் காரணமாக தோன்றியதே. தீவினையை யாருக்கும் விளைவிக்க கூடாது என்ற நமுடைய மரபும், பண்பாடும், சமூகமும் கூறுகிறது. முப்பாலும் உணர்ந்த **திருவள்ளுவரும் ஊழ் பற்றிய ஒரு அதிகாரமே வைத்துள்ளார்**. பழந்தமிழ் இலக்கியமான திணை இலக்கியத்தில் 76 இடங்களில் ஊழ் பற்றிச் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஊழ் இன்றைய வாழ்விலும் மக்கள் மனதில் அழிக்க முடியாத மரபு சார்ந்த சிந்தனையைத் தருகிறது. இதனை சிலப்பதிகார பதிகத்தில்,

> **"ஊழ்வினை உருத்துவந்து, ஊட்டும் என்பதூஉம்**
> **சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்**
> **சிலப்பதிகாரம் என்னும் பெயரால்"**
> (சிலம்பு, பதிகம்,57-59)

இப் பாடல் அடிகளில் கூறுவது முன் செய்த ஊழ்வினை ஆனாது அடுத்தப் பிறவிக்கும் வந்து சேரும். அப்படியே கோவலனுக்கு வந்து சேர்ந்தது. இந்த ஊழின் விளைவை விளக்குவதற்கான காரணமாகச் சிலம்பு உள்ளது. இதனால் சிலப்பதிகாரம் என்ற பெயரும் பெற்றது. சிலம்பு என்பது பொருள் அதன் மேல் ஊழ்வினை என்ற வட்டம் தோன்றுவதால் இயந்திரவியல் பொருள்முதல்வாதமாக அழைக்கப்படுகிறன.

**முடிவுரை**

- இவ்வுலகில் ஒரு புறம் சூரியன் மறைய மறுபுறம் சந்திரன் எழுகின்றான். இடையில் மேகங்கள் இயங்கிக் கொண்டு மழை தருகின்றன. சூரியன், சந்திரன், என்னும் வட்ட சுழற்சி முறையில் இயந்திரத்தின் தன்மையைப் போல் மழை இருப்பதை இளங்கோவடிகள் வர்ணையில் வெளிப்படுகிறது. இயந்தரம் என்பதற்கு அழிவு தரக்கூடிய இயல்பும் இருக்கிறது. இதில் உள்ள மூன்று பொருள்களுக்கு குறைவோ, கூடுதலோ என எது நேர்ந்தாலும் அழிவு என்பது உயிர்களுக்கு ஏற்படும். இச்செயல்பாடுகள் இயந்திர பொருள்முதல்வாதத்துடன் பொருந்தியுள்ளது.

- உடை என்பது மனிதனின் மானம் காப்பது ஆகும். உடை மனிதனின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றது. துணியால் செய்யப்பட்ட விளம்பரக்கொடி மூலம் வியாபாரம் செய்துள்ளனர். பல இயந்திரங்கள் கொண்டு பட்டுப் புடவைகள் நெய்துள்ளனர் இதணால், பண்டைய மக்கள் உடைப் பயன்படுத்தும் முறை மற்றும் அதன் உற்பத்தி முறை ஆகியவற்றை அறியமுடிகிறது.
- தங்கம் எந்த அளவிற்கு மக்கள் பயன்பாட்டுக்கு இருந்ததோ அதே அளவுக்கு அல்லது அதற்கும் மேல் செம்பு, இரும்பு, மரம் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி உள்ளனர். தேர், வாள், வேல், கவசம், வண்டி போன்ற இயந்திரமாக மாற்றி பயன்படுத்தி உள்ளதை இயந்திரவியல் பொருள்முதல்வாதம் கொண்டு பார்க்க முடிகிறது.
- களங்கரைவிளக்கு என்பது படகுகள், கப்பல்கள், ஓடம் போன்ற மரக்களன்களைக் கடலில் இருந்து கரைக்குக் கொண்டுவரும் இயந்திரப் பொருள் ஆகும்.
- உழவு உற்பத்தி மூலம் ஒரு நெல் பல நெல் மணிகளை உருவாக்குகிறாது. மனிதன் இயந்திர பொருட்களாக மண்வெட்டி, ஏர்கலப்பை போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளான். மண் என்ற பொருள் உழைப்பு மூலம் செங்கல், ஓடுகள் போன்றனவாக மாற்றப்பட்டது. நீண்டக் காலத்துக்குப் பயன்படும் வகையில் பொருளின் வடிவம், தன்மை ஆகியவற்றை மாற்றி பயன்படுத்தி இருப்பதை அறியலாம்.
- யாழ் நரம்புகளுக்கு ஏற்றார் போல் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளது. அவை பேரியாழ், சிறியாழ், செங்கோட்டுயாழ், மகரயாழ் என இருந்தாலும். ஒவ்வொன்றிலும் முறையே 21,9,7,17 நரம்புகள் என பயன்படுத்தி அதற்கு இசை பொருந்தி வருவதற்கு நுண்ணிய வேலைப்பாடு கொண்ட இயந்திரம் வடிவத்தை அக்கால மக்கள் செய்து உள்ளனர்.
- ஜார்ச் பொலிசட் என்பவர் 18 ஆம் நூற்றாண்டில் பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சியாக இயந்திரவியல் பொருள்முதல்வாதம் என்ற கோட்பாட்டுக்கு வரையறைதந்தார். **மனிதன் வேலை செய்யும் செயல்பாடுகள் பொருளாகப் பார்க்கப்பட்டது. பிறகு மனிதனின் உணர்வுகளும் பொருளாகப் பார்க்கபட்டன**.
- இயற்கை மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் தருகிறது. அதனை இயந்திரவியல் பொருள்முதல்வாதம் விளக்குகிறது. மக்கள் மனதில் அழியா வடுவாக ஊழ் இருப்பதைப் பொருள்முதல்வாதம் தெளிவுப்படுத்துகிறது. சிலப்பதிகாரத்தில் இயந்திரவியல் பொருள்முதல்வாதக் கோட்பாடு பொருந்தி வருவதை இக்கட்டுரைத் தெளிவுபடுத்தியுள்ளது.
- மனிதனாக இருந்தாலும் பிற உயிரினமாக இருந்தாலும் எல்லாம் தங்களைப் பாதுகாத்து கொள்ளவும் தனித்துவமாக வெளிபடுத்தி கொள்ளவும் ஒரு வட்டத்தை உருவாக்குகிறனர். இது இயந்திரவியல் பொருள்முதல்வாதமாகும்.

### துணைநூல்கள்


1. பிச்சமுத்து ந, 2006, இலக்கிய இயக்கங்கள், மூன்றாம் பதிப்பு, சென்னை, சக்தி வெளியீடு.
2. சாமிநாதையர் உ வே , 2021, சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், பதினான்காம் பதிப்பு, சென்னை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.

3. புலியூர்க்கேசிகன், 2009, சிலப்பதிகாரம், மறு பதிப்பு, சென்னை, பாரி நிலையம்.
4. தேவநேயப்பாவாணர் ஞா, 2017, பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், இரண்டாம் பதிப்பு, சென்னை, பூம்புகார் பதிப்பகம்.
5. சாமிநாதையர் உ வே, 2021, புறநானூறு மூலமும் உரையும், ஒன்பதாம் பதிப்பு, சென்னை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.


**பார்வை நூல்கள்**


1. பஞ்சாங்கம் க, 2015, சிலப்பதிகாரத் திறனாய்வுகளின் வரலாறு, இரண்டாம் பதிப்பு, தஞ்சாவூர், அன்னம்.
2. அறிவுநம்பி அ, 2017, கோட்பாட்டியல் நோக்கில் சிலப்பதிகாரம், முதல் பதிப்பு, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.